# சி.எஸ்.ஐ. தமிழ் திருச்சபை, அபுதாபி

# தூது

நற்செய்தி துணுக்குகள்

## மே 2024 (மடல் - 24) செய்தி - 5

**நீங்கள் வலதுபுறமாய்ச் சாயும்போதும், இடதுபுறமாய்ச் சாயும்போதும்: வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்களுக்குப் பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும். ஏசாயா 30:21**

# பொருளடக்கம்




| | |
|---|---|
| ஆயர் மடல் | 2 |
| ஆயரம்மா மடல் | 4 |
| ஆண்கள் பகுதி | 6 |
| பெண்கள் பகுதி | 8 |
| Children's Corner | 12 |
| வேத வினாக்கள் | 22 |
| கோதுமை மணி | 25 |
| துணுக்குகள் | 27 |
| ஆலய பக்கம் | 29 |

# ஆயர் மடல்

***சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை.*** *ரோமர் 12:1*

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துகிறேன்! கடந்த மாதம் முழுவதும் நம்மையும் நமது குடும்பத்தையும் திருச்சபையையும் பாதுகாத்து, வழிநடத்திவந்த ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன். சிறப்பாக கடந்த மாதத்தை மிஷனெரி மாதமாகக் கொண்டாட கிருபை செய்த ஆண்டவரை ஸ்தோத்தரிக்கிறேன். இத்திருப்பணிக்காகக் கருத்தாய் ஜெபித்த, உற்சாகமாய் உழைத்த, மனப்பூர்வமாய்க் கொடுத்த உங்கள் யாவருக்கும் நன்றி செலுத்துகிறேன். நமது அன்பையும் ஐக்கியத்தையும் பகிர்ந்துகொள்ள ஆண்டவா் கிருபைச் செய்தாா். துதி, கனம், மகிமை, புகழ் அனைத்தும் ஆண்டவருக்கே உரித்தாகட்டும்.

ரோமா் நிருபத்தின், முதல் 11அதிகாரங்களில் மீட்பின் தேவையையும், கடவுள் தமது குமாரன் வழியாக நம்மை மீட்டுக் கொண்டதையும், இந்த மீட்பை, விசுவாசத்தின் வழியாக நமக்குச் சொந்தமாக்கிக் கொண்டதையும், தூய ஆவியானவா் எவ்வாறு வலுவூட்டி அம்மீட்பில் நம்மை வளரச் செய்கிறாா் என்பதையும், மீட்பைப் புறக்கணித்த யூதா்களும், இரட்சிப்பை ஏற்றுக் கொள்ளும் வகையில் எவ்வாறு செயலாற்றிக் கொண்டிருக்கிறாா் என்பதையும் விளக்கிய பவுல் அப்போஸ்தலன், 12ஆம் அதிகாரத்திலிருந்து, கிறிஸ்துவின் மீட்பைத் தமதாக்கிக் கொண்டவா்கள், அதாவது, பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொண்ட கிறிஸ்தவா்களின் அன்றாட நடைமுறை வாழ்க்கை எப்படி இருக்க வேண்டும் என்பதை விளக்குகிறாா்.

1. உங்கள் சரீரங்களை (மூச) உடலை: சரீரம் என்பதற்குப் பவுல் பயன்படுத்தும் கிரேக்கச்சொல், முழு ஆள் தன்மையைக் குறிக்கிறது. நமது முழு ஆள் தன்மையையும். கடவுளுக்குப் பலியாகப் படைக்க வேண்டும். ஏனெனில், நமது சரீரம் கடவுளுக்குரியது. என்பதினாலும் கடவுள் வசிக்கும் ஆலயம் என்பதினாலும் அதைப் பரிசுத்தமாகக் காத்துக்கொள்ளவேண்டும்.

2. உகந்ததுமான (மூச) பிரியமான: பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தேவன் கட்டளையிட்ட பலிகள் கா்த்தருக்குச் சுகந்த வாசனையாகச் செலுத்தப்பட்டது. (எண் 15:3,10) ஆபேலின் பலி கடவுளுக்கு உகந்ததாயிருந்ததால் ஆண்டவா் அதை ஏற்றுக்கொண்டாா். அதைப் போன்று மீட்பைப் பெற்றுக் கொண்ட நமது வாழ்வும் கடவுளுக்கு ஏற்புடையதாக இருக்கவேண்டும்.

3. ஜீவபலியாக (மூச) உயிருள்ள பலியாக: கிறிஸ்துவின் மீட்பைப் பெற்ற நாம், நம்மையே உயிருள்ள பலியாக ஆண்டவருக்குச் செலுத்த வேண்டும். அதாவது நமது

வாழ்க்கை முழுவதும் கடவுளுக்காக வாழ்ந்துகாட்ட வேண்டும். இயேசு கிறிஸ்து முழுவதும் பிதாவின் சித்தத்திற்கு இசைய வாழ்ந்து, சிலுவையில் முழுவதுமாக தம்மை ஒப்புக் கொடுத்தது போல, நமது வாழ்வு முழுவதும் கடவுளின் விருப்பத்தை நிறைவேற்றுவதாக இருக்க வேண்டும்.

4. தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு: கடவுளின் இரக்கத்தை ஆதாரமாகக் கொண்டே நம்மைப் பலியாகக் கொடுக்க வேண்டும். ஏனெனில் தகுதியில்லாத நம்மீது ஆண்டவர் மிகுந்த இரக்கங்காட்டி தமது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவைப் பலியாகக் கொடுத்தார். அந்த இரக்கத்தைக் ஆதாரமாக கொண்டு நம்மையே உயிருள்ள பலியாகக் கொடுக்கவேண்டும்.

5. புத்தியுள்ள ஆராதனை (முச) ஆவிக்குரிய தொழுகை: ஆவிக்குரிய தொழுகை என்பது அறிவு சார்ந்த தொழுகை என்று கூறலாம். கடவுளுடைய திருவுளத்திற்கு அடங்கி வாழ்வதே உண்மையான ஆராதனை. ஆண்டவரிடமிருந்து நாம் பெற்றிருக்கின்ற தூய ஆவியானவரால் ஆற்றல் பெற்று நமது ஆள் தன்மை முழுவதையும் கடவுளுக்கு ஒப்புக் கொடுப்பதே ஆன்மீக ஆராதனை.

எனவே விசுவாசத்தின் வழியாக ஆண்டவர் கொடுத்த மீட்பை சொந்தமாக்கியிருக்கின்ற நாம், நமது ஆவி, ஆன்மா, சரீரம் அனைத்தையும் அண்டவருக்கு ஒப்புக்கொடுத்து வாழ பரிசுத்த ஆவியானவர் துணைசெய்வாராக.

கர்த்தர் உங்களையும் உங்கள் குடும்பங்களையும் ஆசீர்வதிப்பாராக!

*Res. : 02 6791915*
*Mobile : 054 7401421*
*mail :asamuelrev@gmail.com*

*கிறிஸ்துவின் பணியில்*
*தங்கள் அன்பிற்குரிய ஆயர்*
*Rev. Dr. A. Samuel*

## ஜூன் மாத தலைப்பு
## சீடத்துவம்
## Discipleship

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!

நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக. கடந்த மாதம் முழுவதும் ஆண்டவர் நம்மையும் நம்முடைய குடும்பத்தையும் அற்புதமாகப் பாதுகாத்து வழிநடத்தி வந்ததற்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன். இந்த புதிய மாதம் நமக்கும் நம்முடைய குடும்பங்களுக்கும் ஆசீர்வாதமாக இருக்க ஆண்டவர் கிருபை செய்வாராக.

***"நீங்கள் வலப்புறம் சாயும்போதும், இடதுபுறம் சாயும் போதும்: வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்களுக்குப் பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும்."*** *ஏசாயா 30:21*

ஏசாயா தீர்க்கத் தரிசியின் புத்தகம், திருமுறையில் சிறப்பான புத்தகம். அதன் சிறப்புக்கு முக்கிய காரணம் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னதாகவே இறைமகன் இயேசுவைப் குறித்து முன் அறிவித்திருக்கிறது.. ***"இது வழி இதில் நடவுங்கள்"*** என்கிற ஆண்டவரின் சத்தத்தை யார் அறிந்து கொள்ளமுடியும் என்பதை இந்தப்பகுதி நமக்கு விளக்குகிறது.

***1. ஆண்டவர் மீது நம்பிக்கையோடும் இருக்கிறவர்கள் அவரின் வழியை அறிந்து கொள்வார்கள்:***

இஸ்ரவேல் மக்களின் வரலாற்றிலேயே **சீரிய எப்பிமித்தர்** போர் என்பது முக்கியமானது. யூதா அரசனாகிய ஆகாஷ் மிகவும் பயந்தவன் என்பதால் அசீரியர்களுக்கு எதிராக இஸ்ரவேல் சீரிய கூட்டணியில் சேர மறுத்து விட்டான். எனவே ஆகாஷ்க்கு எல்லா பக்கத்திலும் இருந்தும் நெருக்கடி வந்தது. தெற்கிலிருந்து ஏதோமியர். வடக்கிலிருந்து இஸ்ரவேல் சீரியக் கூட்டணிப்படை. மேற்கிலிருந்து பெலிஸ்தியர் படை. மூன்று பக்கத்திலிருந்தும் போர் படைகள் ஆகாசை நேருக்கிக்கொண்டு இருக்கிறது. ஆகாஷ் பயந்து நடுந்துகிறான். அவனின் மனநிலையை ஏசாயா சொல்கிறார், ***ராஜாவின் இருதயமும் அவன் ஜனத்தின் இருதயமும் காட்டில் உள்ள மரங்கள் காற்றினால் அசைவது போல அசைந்தது*** என்கிறார். ஏசாயா 7:2 ஆகாஷ் அரசனும் மக்களும் பயந்து நடுங்குகிறார்கள். இந்த இக்கட்டான சூழலில் ஏசாயா தீர்க்கன் தோன்றி ஆண்டவரிடம் நம்பிக்கை வைக்கச் சொல்லுகிறார். நீ பயப்படாமல் அமர்ந்திரு, ஆண்டவரிடம் நம்பிக்கை வையுங்கள் என்கிறார். ஏசாயா 7:6 ஆண்டவர் மீது நம்பிக்கை கொண்டு அமைதியுடன் காத்ததிருந்தால் வெற்றி தருவார் என்று கூறுகிறார். ஆனால் ஆகாஷ் ஆண்டவரின் வார்த்தைக்குச் செவிசாய்க்கவில்லை. இதுவே இஸ்ரவேல் அழிவிற்கு காரணமாக

அமைந்து விட்டது. நெருக்கடியான சூழலில், எது சரியானது என்று தெரியாமல் திகைக்கும் பொழுது நாம் செய்ய வேண்டியது அமைதியாக ஆண்டவர் மீது நம்பிக்கை வைக்க வேண்டும். சங்கீதம் 46:10 சொல்கிறது ***நீங்கள் அமர்ந்திருந்து நானே தேவன் என்று அறிந்து கொள்ளுங்கள்.*** நாம் அமர்ந்து நம்பிக்கையோடு காத்திருந்தால் வழி இதுவே என்கின்ற ஆண்டவரின் சத்தத்தைக் கேட்க முடியும்.

***2. ஜெபிக்கிறவர்கள் ஆண்டவரின் வழியை அறிந்து கொள்வார்கள்:***

வழி இதுவே என்கிற கடவுளின் சத்தத்தை ஜெபிக்கிறவர்கள் அறிந்து கொள்ள முடியும். ஏனெனில், அவரை நோக்கி ஜெபிக்கிற எல்லாருக்கும் ஆண்டவர் பதில் கொடுப்பேன் என்கிறார். இஸ்ரவேல் மக்களின் கூப்பிடுதலுக்கு ஆண்டவரா பதில் கொடுக்கிறார். (யாத்திராகமம் 3:7-10) நெருக்கடியான சூழல்களில் ஆண்டவரை கூப்பிடும் பொழுது ஆண்டவர் நம் சத்தத்தைக் கேட்டு பதில் கொடுக்கிறார். எசேக்கியா அரசன் கூப்பிட்ட பொழுதும் ஆண்டவர் பதிலளிக்கிறார். (ஏசாயா 30:19).

புதிய மாதத்துக்குள் வந்திருக்கிறோம். நெருக்கடியான சூழல்கள் நம்மை சுற்றி வந்துக் கொண்டிருக்கலாம். நாம் செய்ய வேண்டிய முக்கியமான காரியம் நாம் ஆண்டவரின் வழிகாட்டுதலுக்காகப் பொறுமையோடும், நம்பிக்கையோடும் காத்திருக்கவேண்டும். ஆண்டவரை நோக்கி ஜெபிக்கும் பொழுது அவர் நமக்கு பதில் கொடுக்கிறார். நம்மை வழி நடத்துகிற ஆண்டவரைச் சார்ந்து அவர் வழியில் நாம் நடப்போம், ஆண்டவரின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வோம்.

***மீட்பரின் பணியில்***
Mrs. S. ***ஜெபா சாமுவேல்***
**ஆயரம்மா**

# ஆண்கள் பகுதி

## பரிசுத்த ஆவியின் செயல்பாடுகள்

*நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். (யோவான் 14:16). ஆண்டவராகிய யேசுகிறிஸ்து தம் பரத்துக்கு ஏறிய போது தம் சீஷர்களுக்கு கொடுத்த வாக்குறுதி தான், பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனை நமக்கு தருவதாக கூறியதாகும்.*

*தான் பரமேறிச் சென்றவுடன் நமக்காக அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியானவரை இயேசு தேற்றரவாளன்' என்று அழைப்பதைப் பார்க்கிறோம். தேற்றரவாளன் என்கிற பதம் Comforter என்று ஆங்கிலத்திலும் Paracletos (பராக்ளீட்டோஸ்) என்று கிரேக்கத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பெயரானது பரிசுத்த ஆவியானவர் தேவ பிள்ளைகளாகிய நம்முடைய வாழ்வில் செயலாற்றும் காரியங்களை உள்ளடக்கியிருக்கிறது.*

*பரிசுத்த ஆவியானவடைய "தேற்றரவாளன் " என்கிற காரண பெயருக்குள் இன்னும் ஆறு காரண பெயர்கள் மறைந்திருக்கின்றன.*

**1. ஆலோசனை கொடுப்பவர் (Counselor)**

*"பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து .... எல்லாவற்றையும் நிறைப்பூட்டுவார்" (யோ. 14:26) நம்முடைய அன்றாட வாழ்க்கையில் சாதாரனமான சூழ்நிலையாக இருந்தாலும் சரி, அசாதாரனமான சூழ்நிலையாக இருந்தாலும் சரி நாம் நடக்க வேண்டிய சரியான வழியை நமக்கு பரிசுத்த ஆவியானவர் காட்டுகிறார். அதனால் நாம் எடுக்கும் முயற்சிகள் தோல்வி அடைவதில்லை. நம்முடைய ஆற்றல் வீணாய் போவதில்லை. அதற்கு பதிலாக வெற்றியின் பாதையிலே நடந்து வெற்றியை மட்டுமே நாம் காண முடியும்.*

**2. உதவி செய்கிறவர் (Helper)**

*"அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார்" (ரோ. 8:26) ஒன்றுக்கும் மேற்பட்ட பலவீனங்கள் நம்முடைய மனதில், சரீரத்தில், பொருளாதாரத்தில் இருக்கலாம். எப்பேர்ப்பட்ட பலவீனத்திலும் பரிசுத்த ஆவியானவர் தன்னுடைய பெலனை நமக்கு தந்து உதவி செய்கிறார்.*

**3. பரிந்து பேசி ஜெபிக்கிறவர் (Intercessor)**

*நாம் நம்முடைய இக்கட்டான சூழ்நிலைகளில் அநேக மனுஷர்களுடைய ஜெபத்தை நாடி நிற்கிறோம். அவர் சிறந்த ஜெபவீரர்! இவர் ஜெபித்தால் நிச்சயம் நடக்கும்! என்றெல்லாம் நமக்காக ஜெபிக்கும்படி பிறரை தேடுகிறோம். தவறு ஒன்றுமில்லை எனினும், நமக்காக ஒருவர் பரிந்து பேசி வேண்டுதல் செய்துக் கொண்டிருக்கிறார் என்பதை நாம் மறந்து போய்விடக் கூடாது. அவர் தான் பரிசுத்த ஆவியானவர்!*

*"நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியது இன்னதென்று அறியாமலி ருக்கிறபடியால், ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்" (ரோ. 8:26)*

*என்ன சொல்லி ஜெபிப்பது ! எப்படி ஜெபிப்பது ! என்றெல்லாம் அறியாமல் திணருகிற வேளையிலே ஆவியானவரை அழைப்போம். அளவில்லாத அற்புதங்களை நாம் காணமுடியும். மிகச் சுலபமாக நம்முடைய வேண்டுதல்கள் கேட்கப்படுவதைப் பார்க்க முடியும்.*

**4. வழக்காடுபவர் (Advocate)**

நம்முடைய நல்வாழ்க்கைக்காக யாவற்றையும் கல்வாரி சிலுவையில் இயேசுவானவர் செய்து முடித்துவிட்டார். "நாம் ஒருவரோடொருவர் வழக்காடும்படி எனக்கு நினைப்பூட்டு " ஏசா. 43:26) என்று வேதாகமம் நமக்கு சொல்லியிருக்கிறது. சிலுவையில் நிறைவேறின நன்மைகளை சொல்லி ஜெபிப்போம். வாக்குத்தத்தங்களை சொல்லி ஜெபிப்போம். அப்போது பரிசுத்த ஆவியானவர் நமக்காக ஒரு வழக்கறிஞராக செயல்பட்டு வரவேண்டிய நன்மைகளை எல்லாத்தடைகளையும் உடைத்துப் போட்டு பெற்றுக் கொடுப்பார். தேற்றரவாளன் நம்முடைய பெலன்.

**5. பெலப்படுத்துகிறவர் (Strengthener)**

"பலங்கொண்டு திடமனதாயிரு; திகையாதே, கலங்காதே, நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார்" (யோசு. 1:9).

பரிசுத்த ஆவியானவர் மீட்கப்பட்டவர்களுடைய வெற்றி வாழ்க்கைக்கு நல்லதொரு துணையாளராயிருக்கிறார். நாம் வெற்றியை சுதந்தரித்துக் கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம். பாலும் தேனும் ஓடுகின்ற வாழ்க்கை நமக்கு ஆயத்தமாக்கப்பட்டுவிட்டது. யோசுவாவைப்போல அவற்றை நாம் சுதந்தரித்துக் கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம். இதற்கு நமக்கு தேவையானது திடமனது. அதனால் தான் யோசுவாவிடம் தேவன் : பலங்கொண்டு திடமனதாயிரு என்று சொன்னார்.

**6. இயேசுவுக்கு பதிலாக நிற்பவர் (Standby)**

மாம்சத்தில் வெளிப்பட்ட கர்த்தராகிய இயேசு , தான் நமக்கு செய்ய வேண்டிய யாவற்றையும் சிலுவையிலே செய்து முடித்துவிட்டார். தான் இருந்த இடத்தில் அதாவது இந்த பூமியில் தன்னுடைய ஜனங்களை வாழவைக்க இயேசுவானவர் தனக்கு பதிலாக தனக்கு Standby ஆக பரிசுத்த ஆவியானவரை அனுப்பியிருக்கிறார். இயேசு இன்று, நம்முடைய வீட்டிற்கு வருவாரானால் என்னென்ன நன்மைகள் நடக்குமோ அவையனைத்தையும் இன்று பரிசுத்த ஆவியானவர் நமக்கு செய்து கொண்டேயிருக்கிறார்.

இயேசு கிறிஸ்துவைக் குறித்து அறியவேண்டுமானால் கூட நாம் பரிசுத்த ஆவியானவரையே அதிகம் தேடவேண்டும். ஏனெனில், "பரிசுத்த ஆவியினாலேயன்றி இயேசுவைக் கர்த்தர் என்று எவனும் சொல்ல முடியாது என்று உங்களுக்குத் தெரிவிக்கிறேன்" (1 கொரிந்தியர் - 12:3) என எழுதுகிறார் பவுல் அடிகள். எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்" (ரோமர்-8:14) இப்படி ஒருவர் ஆவியினால் நிறையும்போது மட்டுமே அவரில் ஆவியின் கனிகள் வெளிப்படும், அதாவது ஆவிக்குரிய குணங்கள் வெளிப்படும். "ஆவியின் கனியோ அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் ......"(கலாத்தியர் - 5:22,23) இத்தகைய ஆவியின் கனிகள் எனும் குணங்களுள்ளவனே ஆவியில் நிறைந்தவன். அத்தகையவனே கிறிஸ்துவின் சீடன்.

அன்பானவர்களே, கிறிஸ்து வாக்குத்தத்தம் பண்ணின பரிசுத்த தேடி பெற்றுக்கொள்கிறவர்களாக, கிறிஸ்துவை இன்னும் அதிகம் அதிகம் அறிந்து கனியுள்ள ஒரு வாழ்க்கை வாழ நம்மை ஒப்புக் கொடுப்போம்; அதன் மூலம் கிறிஸ்துவை உலகிற்கு வெளிப்படுத்துவோம், ஆமென்.

கிறிஸ்துவில் அன்புடன்
**ஜெய சந்திர ராஜா**

# பெண்கள் பகுதி

## வாழவைக்கும் தூய ஆவியானார்



யோசேப்பு, தானியேல், தாவீது, பேதுரு, பவுல் போன்றவர்களின் வாழ்க்கையில் தூய ஆவியாவனவர் வாசம் பண்ணினார் என்பதையும், அதன் மூலம் அவர்கள் அநேக காரியங்களை சாதித்தார்கள் என்பதையும் வேதாகமத்தில் காண்கிறோம். ஏனெனில் கர்த்தருடைய ஆவியானவர் தாம் வாசம் பண்ணும் மனிதனுக்கு உலகம் தரக்கூடாத கீழ்க்காணும் காரியங்களை வழங்குகிறார்.

- **ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவி (The spirit of wisdom and understanding)**

நம்மை ஆண்டவர் வைத்திருக்கும் இடத்தில், நம்முடைய காரியத்தை ஒழுங்காக செய்வதற்கு, நமக்கு சரியான புரிந்துகொள்ளுதல் அவசியம். நம்மை சுற்றியுள்ளவர்களை புரிந்துகொள்ளும் உணர்வு வேண்டும். நம்முடைய கடமை, நம்முடைய பொறுப்பு என்ன என்பதை இடம், பொருள், ஏவல் அறிந்து புரிந்து கொள்ள வேண்டும். இப்படியாக சரியான காரியங்களை சரியான நேரத்தில் செய்ய வேண்டுமெனில் அதற்கு ஞானம் வேண்டும். உலகப்பிரகாரமான அறிவு இருந்தாலும் அதை சரியாகப் பயன்படுத்தும் விதத்தை ஞானத்தின் மூலம் தான் பெறமுடியும். அதாவது நம் கல்வியின் மூலம் பெற்ற அறிவை, சரியானபடி உபயோகிக்க கர்த்தர் அருளும் ஞானம் அவசியம். அத்தைகைய ஞானத்தையும் அதன் மூலம் கிடைக்கும் உணர்வையும் அருளும் ஆவி கர்த்தருடைய ஆவியானவரே.

- **ஆலோசனையையும் பெலனையும் அருளும் ஆவி (The spirt of counsel and might)**

எட்டு மாதத்தில் அடியெடுத்து வைக்கும் குழந்தைக்கு எப்படி பிறரின் துணை நடக்க அவசியமோ, வாழ்க்கைப் பாதையில் ஒவ்வொரு அடியையும் சரியானபடி எடுத்து வைக்க ஆலோசனை அவசியம். நாம் அனேக நேரங்களில் நம் பெற்றோரிடமோ, நண்பரிடமோ, அல்லது அனுபவம் நிறைந்த பெரியவர்களிடமோ ஆலோசனை கேட்கிறோம். அது நல்லது தான். ஆனால் அது எப்போதும் சரியாக இருப்பதில்லை. சில சமயங்களில் பிறர் தரும் ஆலோசனை தன்னலமுள்ளதாக இருக்கும். நாம் யாரை அணுக வேண்டும், எப்படி செய்ய வேண்டும், எது சரியான வழி என்பதையறிய தேவனுடைய ஆவியானவரின் துணை நமக்கு வேண்டும். அவரே ஆலோசனைக் கர்த்தர். அவர் நமக்கு போதிக்கும் ஆசிரியர். வழி இதுவே இதிலே நடவுங்கள் என்று வழிகாட்டும் வழிகாட்டி அவர். அது மட்டுமல்ல. அவர் காட்டும்


வழி ஒருவேளை கடினமானதாய் இடுக்கமாய் இருந்தாலும், அதிலே செல்வதற்கு பெலனைக் கொடுக்கிற ஆவியானவர் அவர். மனிதர் நமக்கு ஆலோசனை கொடுத்து வழியைக் காட்டலாம். ஆனால் கூட வர மாட்டார்கள். கர்த்தருடைய ஆவியானவரோ, நமக்கு ஆலோசனையைக் கொடுத்து, அதோடு கூட அந்த ஆலோசனையின்படி செய்ய பெலனையும் கொடுக்கிறார். எத்தனை மகிழ்ச்சிகரமான காரியம் இது!

- **அறிவையும் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தையும் அருளும் ஆவி ( The spirit of knowledge and the fear of the Lord)**

கர்த்தரை, மெய்யான தேவனை கண்டுகொள்ளும் அறிவை கர்த்தருடைய ஆவியானவர் கொடுக்கிறார். கர்த்தருடைய செய்கைகளையும், அவருடைய வல்லமையையும் உணர்ந்து கொள்ளும் அறிவையும் கொடுக்கிறார். எல்லாவற்றிற்கும் மேலாக அந்த அறிவின் மூலம் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தையும் தருகிறார். உலகத்தால் கறைபடாது நம்மை காத்துக்கொள்ளவும், நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்திலே ஓடி, முடிவில் ஜீவ கிரீடத்தை பெற்றுக்கொள்ளவும் கர்த்தருக்குப் பயப்படுகிற பயம் மிகவும் அவசியம். அத்தகைய பயத்தை நம்மோடு வாசம் பண்ணும் கர்த்தருடைய ஆவியானவரால் மட்டுமே கொடுக்க முடியும்.

எனவே ஞானமாய் காரியங்களை புரிந்துகொண்டு, கர்த்தருடைய பெலத்தினால் அவர் காட்டும் வழியில் அவர் ஆலோசனைப்படி நடந்து, அறிவுள்ளவர்களாய் தேவ பயத்தோடு வாழ கர்த்தருடைய ஆவியானவர் மிகவும் அவசியம். அப்போது நம் வாழ்க்கை ஒரு அர்த்தமுள்ள வாழ்க்கையாக, நம்மை சுற்றியுள்ளவர்களுக்கு ஓர் கலங்கரை விளக்காக அமையும். தேவசாயலாக சிருஷ்டிக்கப்பட்ட நாம், இயேசுகிறிஸ்துவின் பிம்பங்களாக வாழவேண்டும் என்பதே கர்த்தரின் நோக்கமாகும். அதை நிறைவேற்ற நம்முடன் வாசம் செய்யும் கர்த்தருடைய ஆவியானவர் உதவுவாராக!

**ஜெபசீலி ஆசீர்**



## சேபாவின் ராஜஸ்தீரி [1இராஜா. 10:1-13, மத்.12:42]

சேபாவின் ராஜஸ்தீரி எத்தியோப்பாவிலுள்ள சேபாவை சார்ந்தவள் என்று வேதவல்லுநர்கள் கருதுகின்றனர். மத்.12:42-ல் இயேசுகிறிஸ்து இவள் தென் தேசத்து ராஜஸ்தீரியென்று குறிப்பிடுகிறார்.

**சேபா ராஜஸ்திரீயின் அறிவு:**

இஸ்ரவேலை அரசாண்ட சாலமோனை தேவன் அதிகமான ஞானத்தாலும், ஐசுவரியத்தாலும் ஆசீர்வதித்தார். சகல ஜனங்களைப் பார்க்கிலும் அவன் ஞானவானாயிருந்தான். அவனது நாட்கள் இஸ்ரவேலின் வரலாற்றில் பொற்காலமாக இருந்தது. அவனை சுற்றிலும் சமாதானம் உண்டாயிருந்தது. அவனது கீர்த்தியைக் குறித்தும், ஞானத்தைக் குறித்தும் சேபாவின் ராஜஸ்தீரி கேள்விப்பட்டாள். அவள் அதை முழுவதுமாக நம்பாமல், தன் தேசத்திலிருந்து மிகுதியான வெகுமதிகளோடு சாலமோனை சந்திக்க புறப்பட்டாள். தான் கேள்விப்பட்ட ஞானத்தை சோதிப்பதற்காக அநேக விடுகதைகளை விடுத்தாள். சாலமோன் எல்லாவற்றிற்கும் பதில் விடுத்தான். ராஜஸ்தீரி சாலமோனின் ஞானத்தையும், அவன் கட்டின அரண்மனையையும், அவன் பந்தியின் போஜனப் பதார்த்தங்களையும், அவன் ஊழியக்காரரின் வீடுகளையும், அவன் உத்தியோகஸ்தர் வரிசையையும், அவர்கள் வஸ்திரங்களையும், அவனுடைய பானபாத்திரக் காரரையும், அவன் கர்த்தருடைய ஆலயத்திற்குள் பிரவேசிக்கும் நடை மண்டபத்தையும் கண்டபோது ஆச்சரியத்தால் பிரமைக் கொண்டாள். எல்லாவற்றையும் பார்த்தபோது நம்பினாள். கேள்விப்பட்ட பிரஸ்தாபத்தைப் பார்க்கிலும், உம்முடைய ஞானமும், செல்வமும் அதிகமாயிருக்கிறது என்று தன் வாயினால் அறிக்கையிட்டாள். உம்முடைய ஜனங்கள் பாக்கியவான்கள். எப்போதும் உமக்கு முன்பாக நின்று உம்முடைய ஞானத்தைக் கேட்கிற உம்முடைய ஊழியக்காரரும் பாக்கியவான்கள் என்று போற்றினாள். ராஜாவாக ஏற்படுத்தின கர்த்தரை ஸ்தோத்தரித்தாள். தமது ஜனத்தின் மேல் தேவன் பாராட்டின அன்பைத் துதித்தாள்.

### வெகுமதி கொடுத்தும் பெற்றும் சென்றாள்

ராஜஸ்தீரி சாலமோனுக்கு 120 தாலந்து பொன்னையும், மிகுதியான கந்தவர்க்கங்களையும், இரத்தினங்களையும் கொடுத்தாள்.

சாலமோனும் சந்தோஷமாய் அவளுக்கு வெகுமதிகள் கொடுத்ததுமல்லாமல், அவள் விருப்பப்பட்டு கேட்டவற்றையும் கொடுத்தான்.

சேபாவின் ராஜஸ்தீரி தான் கேள்விப்பட்டதை தன் கண்களால் பார்க்க விரும்பினாள். இறுதியில் அது அவள் சந்தோஷத்தைப் பெருகப் பண்ணிற்று.

- சாலமோனிலும் பெரியவர் நம்மோடிருக்கிறார். தேவனுடைய மகத்துவங்களை நமது சொந்தக் கண்களால் காண ஆவல் கொள்ள வேண்டும். ஞானத்தின் உறைவிடம் அவர். அவரைக் குறித்து நாம் அதிகமதிகமாய் அறியும்போது நமது மனக்கண்கள் பிரகாசமாகும். நாம் விரும்பி கேட்பவைகள் கிடைக்கும்.

சாலமோனிலும் பெரியவராகிய இயேசுகிறிஸ்துவைக் குறித்து அறிந்துக் கொள்ள நாம் வாஞ்சைக் காட்டுவோம்.

கர்த்தர் தாமே தமது சிறந்த வெகுமதிகளால் நம்மை அலங்கரிப்பாராக!

**திருமதி. ஷர்மிளா ராஜேஷ்**

# CHILDREN'S CORNER


Dear Children,

The theme this May is "**HOLY SPIRIT**".



When Jesus was here on earth, he told his followers he would send the Holy Spirit to be with them always: To Comfort; Teach; and Guide.

The Holy Spirit is an important member of the Trinity, which consists of Three Persons – the Father; the Son and the Holy Spirit.




The Pentecost was the first time anyone had ever had God's Spirit inside them instead of just on them or with them.

The Holy Spirit is in every single person who follows Jesus. He lives inside you, as the Helper Jesus promised to send.

## WHY WE NEED THE HOLY SPIRIT?



1. Empowers us to be witnesses for Jesus.
2. Enables us to worship God.
3. Gives us the Gifts of the Spirit
4. Cultivates in us, the fruit of the Spirit.
5. Annoints us to do His purposes.


## FEELING THE PRESENCE OF THE HOLY SPIRIT



- A feeling of conviction that Jesus loves us and that the gospel is true.
- A comforting feeling when we are sad or lonely.
- A happy feeling after we have repented.
- A good feeling when we hear beautiful music or see inspiring art.
- A peaceful feeling that something is a good choice.
- A warning feeling that something is wrong.

# MAJOR BIBLE EVENTS #5 – CROSSING THE RED SEA

It was time for the Israelites to leave Egypt.



After God performed many miracles, Pharaoh released the Israelites, but changed his mind again, and came after the Israelites with his army.

The Israelites were caught between Pharaoh's army and the Red Sea.

On God's command, Moses stretched out his hand, and a strong wind created a path of dry land through the sea, with walls of water on both sides.

The Israelites traveled through the sea safely to the other side.



The Egyptians followed them through the parted waters, but the wheels of their chariots became clogged in the mud.

Again Moses stretched out his hand, and the water came crashing over the Egyptians.



The Israelites saw the great work of the Lord and believed in Him, and his servant Moses.

The parting of the Red Sea is one of the most significant events in the Old Testament.

It emphasizes **God's amazing act of salvation** in freeing the Israelites from slavery. For 400 years, the Israelites had been enslaved and mistreated in Egypt (Acts 7:6).

## CHILDREN IN THE BIBLE #5 – DAVID

David started life as a shepherd-boy.




He quickly grew into a brave teenager who protected his flock from hungry lions.

His great skill with a catapult helped him defeat a giant called Goliath even when all the King's soldiers were too scared to fight.



He was very musical, playing a harp, the nearest thing they had in those days to a guitar. He wrote many poems and songs. You can find them in the book of Psalms.





David often spoke of the Holy Spirit (Ps. 51:10;

God chose David to be the King of Israel, and called him, "a man after God's own heart."

**Daily Application** – Children, we too can do great things for God, when with **courage, we trust Him, and have faith in Him.**

## SAYING IT WITH PICTURE...




But if your eyes are bad, your whole body will be full of darkness. If then the light within you is darkness, how great is that darkness! - MATTHEW 6:23 NIV




And divided tongues as of fire appeared to them and rested on each one of them. And they were all filled with the Holy Spirit... — ACTS 2:3-4 KJV


## TINY TOTS SECTION

### COLOR IN…THE HOLY SPIRIT





The Spirit of God descending like a dove.
Matthew 3:16, Mark 1:10, Luke 3:22



FRUIT OF THE SPIRIT
(Galatians 5:22-23)
Make your way through the letter mazes and write the names of each fruit of the Spirit.
Copy the Picture!
L _V_
J _Y
P _A_ _
_T_ _ _C_
K _ _D_ _ _ _ _
F _ _ _ _ _F_ _N_ _ _
S _L_
G _ _D_ _ _ _ _
_ _T_ _N_ _ _
C_ _ _T_ _L
How many fruit can you spot?

# Find the Hidden Items

**INSTRUCTIONS:** Use the key to find and circle the hidden items in the picture.



Help this child to find his way home.
You, too, need the Holy Spirit to guide you to Jesus and the home in Heaven.



# OLDER CHILDREN SECTION

## CHOOSE THE CORRECT OPTION – HOW WELL DO YOU KNOW THE HOLY SPIRIT?

1. The Holy Spirit, is a distinct person, but part of the Trinity.

| | | | |
|---|---|---|---|
| a. | True | b. | False |
| c. | Maybe | d. | Sometimes |

2. The Holy Spirit was present with God and Jesus, during the Creation (Gen 1:2).

| | | | |
|---|---|---|---|
| a. | True | b. | False |
| c. | Maybe | d. | Not clear in the Bible |

3. When the Holy Spirit came on the disciples in Jerusalem, they danced (Acts 2:4)

| | | | |
|---|---|---|---|
| a. | True | b. | False |
| c. | Maybe | d. | Not clear in the Bible |

4. The Holy Spirit is as real as God and Jesus.

| | | | |
|---|---|---|---|
| a. | True | b. | False |
| c. | Maybe | d. | Sometimes |

5. The Holy Spirit helps us pray. (Rom. 8:26)

| | | | |
|---|---|---|---|
| a. | True | b. | False |
| c. | Maybe | d. | Not clear in the Bible |

6. Jesus described the Holy Spirit as our Comforter. (John 14:26)

| | | | |
|---|---|---|---|
| a. | True | b. | False |
| c. | Maybe | d. | Not clear in the Bible |

7. The Holy Spirit speaks. (Acts 13:2)

| | | | |
|---|---|---|---|
| a. | True | b. | False |
| c. | Maybe | d. | Not clear in the Bible |

8. The Holy Spirit is first mentioned in which book of the bible? (Gen. 1:2)

| | | | |
|---|---|---|---|
| a. | Psalms | b. | Acts |
| c. | Genesis | d. | Revelations |

9 Which of this is a gift of the Holy Spirit? (1 Corin. 12:8)

| | | | |
|---|---|---|---|
| a. | Psychic powers. | b. | Vocal ability. |
| c. | Speaking with wisdom. | d. | Ability to predict the future. |

10. When Jesus was baptized, the Holy spirit descended in the form of a _____.

| | | | |
|---|---|---|---|
| a. | Sun's Rays | b. | Dove |
| c. | Angels | d. | Fire |

11. 50 days after Easter, the Holy Spirit descended on the day of the _________.

| | | | |
|---|---|---|---|
| a. | The Passover. | b. | Pentecost. |
| c. | The harvest. | d. | None of the above. |

12. Which of the following is NOT a name for the Holy Spirit.

a. Advocate. b. Comforter c. Counsellor. d. Savior

## TEEN - FOOD FOR THOUGHT


One day, speaking to a large audience, D.L. Moody held up a glass and asked, "How can I get the air out of this glass?"



One man shouted, "Suck it out with a pump!" Moody replied, "That would create a vacuum and shatter the glass."


After numerous other suggestions Moody smiled, picked up a pitcher of water, and filled the glass. "There," he said, "all the air is now removed."

He then went on to explain that **victory in the Christian life is not accomplished by "sucking out a sin here and there," but by being complexly filled with the Holy Spirit.**



**The Pentecost**
**Acts 2:1-21**

1. What day had come in the passage?



2. What could they hear?



3. What sat on their heads?



4. What were they filled with?



The Holy Spirit



5. What did they begin to speak?




**Promise of the Holy Spirit**

**John 14:15-21**

1. If we love Jesus, what will we do?

Tell Him to go away! | Shout at Him! | The things He commands

2. What will the Father give us?



Helper





3. How long will the helper be with us?







One Day




4. What is the helper?

Spirit of lies | Spirit of Truth | Spirit of Presents

5. Where does the Holy Spirit live?



Bible Pathway Adventures



BIBLE WORKSHEET

# FRUIT OF THE SPIRIT

Read John 16:8 to learn the role of the Holy Spirit. Then read Galatians 5:22-25. Fill in the blanks with the words at the bottom of the page.

"But the _________ of the Spirit is love, _________, peace, patience, _________, goodness, ________, gentleness, and self-control. Against such _________ there is no law. Those who belong to _________ have crucified the _________ with its desires. If we live by the _________, let us also walk by the Spirit."



| | |
|---|---|
| SPIRIT | CHRIST |
| JOY | FRUIT |
| KINDNESS | FLESH |
| THINGS | FAITH |

For more free Bible resources and Teacher Packs including coloring pages, worksheets, quizzes and more visit our website at: www.biblepathwayadventures.com

## Answers to April Children's Corner

### CHOOSE THE CORRECT OPTION – 'EVANGELISM' QUIZ

1. a. Make disciples; witness about Jesus.
2. c. That He will be with them always.
3. c. Wait for the Holy Spirit
4. d. All Christians.
5. a. Antioch.
6. c. Evangelizing Gentiles.
7. d. Gentiles.
8. a. Timothy.
9. a. Name of Father; Son; and Holy Spirit
10. a. Everything Jesus commanded
11. d. All of the above.
12. b. Churches.

## Hope You Enjoyed All the Activities. Complete The Short Review Below...

1. The theme for the month of April is: **Evangelism.**
2. 5 ways to be involved in Evangelism **(i) Be mission – minded.**

**(ii) Understand that God is very much mission – minded (iii) Pray for others**

**(iv) Understand more about the Gospels (v) Share Gospel as the Holy Spirit leads.**

3. Matthew 28:19; 20 says - **Therefore go and make disciples of all nations, baptizing them in the name of the Father and of the Son and of the Holy Spirit, and teaching them to obey everything I have commanded you. And surely I am with you always, to the very end of the age."**
4. Which Apostle of Jesus came to India to evangelize? **St. Thomas.**

***Note : Submit the answers of Bible Quiz to Pastor uncle or aunty on or before 25th of every month.***

# வேத வினாக்கள்

**வேதாகமம் முழுவதும்**
**(சரியான விடையை திருமறை ஆதாரத்தோடு எழுதவும்)**

1. ஓய்வு நாளை எவ்வாறு சொல்ல வேண்டும்?
2. ஓய்வு நாளுக்கு முந்தின நாள் என்ன நாள்?
3. ஓய்வு நாளின் நித்திய கட்டளை என்ன?
4. ஓய்வு நாளில் எதற்காக எச்சரிக்கையாயிருந்து எவ்வாறு பரிசுத்தமாக்க வேண்டும்?
5. ஓய்வு நாளிலே கூடி வந்தார்கள் எதற்காக?
6. ஓய்வு நாளில் ஜெப ஆலயத்தில் போதகம் பண்ணிக் கொண்டிருந்தது யார்?
7. ஓய்வு நாள் தோறும் ஜெப ஆலயத்திலே புத்தி சொன்னவன் யார்?
8. ஓய்வு நாளிலே அதிபதி கர்த்தருக்குப் பலியிடும் தகனபலி என்ன?
9. ஓய்வு நாட்களை கர்த்தர் எதற்காக அடையாளமாய் கட்டளையிட்டார்?
10. ஓய்வு நாட்களை ஆசரித்து கர்த்தருக்கு இஷ்டமானவைகளைத் தெரிந்து கொண்டு உடன்படிக்கையைப் பற்றிக் கொள்ளுகிறவர்கள் யார்?
11. ஓய்வுநாட்களைக் குறித்து யார் யாரைப் பார்த்து பரியாசம் பண்ணினார்கள்?
12. ஓய்வு நாட்களின் பரிசுத்தத்தை மிகவும் குலைத்துப் போட்டவர்கள் யார்?
13. ஓய்வுநாள் பிரயாண தூரத்திலிருக்கிற மலை எது?
14. ஓய்வு நாளில் எது சம்பவியாதபடிக்கு வேண்டிக் கொள்ள வேண்டும்?
15. ஓய்வில்லாமல் சொல்லிக் கொண்டிருந்தன எவைகள்? எதனை?

**குறிப்பு :** ***அந்தந்த மாதத்திற்குரிய வேத வினாக்களின் பதில்களை அந்தந்த மாதத்தில், 25-ம் தேதிக்குள் எழுதி ஆயரிடம் அல்லது ஆயரம்மாவிடம் ஒப்படைக்கவும்.***

## ஏப்ரல் மாத வேத வினாக்களுக்கான பதில்கள்

| கேள்வி எண் | பதில் | திருமறை ஆதாரம் வேதாகமம் முழுவதும் |
|---|---|---|
| 1 | நீதிமான் | நீதி. 14:32 |
| 2 | எலியாவின் கல்லறையில் | 2 ராஜா. 13: 20, 21 |
| 3 | மனுஷனால் | 1 கொரி. 15: 21 |
| 4 | கிறிஸ்து | ரோமர் 14 :9 |
| 5 | முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் | வெளி.20:6 |
| 6 | கிறிஸ்து | அப்.26:23 |
| 7 | விருந்துபண்ணும்போது ஏழைகளையும் ஊனரையும் சப்பாணிகளையும் குருடரையும் அழைப்பது | லூக்கா 14: 13, 14 |
| 8 | பவுல் | அப். 17: 16 – 18 |
| 9 | முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் | வெளி.20:6 |
| 10 | அப்போஸ்தலர்கள் | அப். 4:33 |
| 11 | லாசரு | யோவான் 11:43,44 |
| 12 | ஐத்திகு | அப். 20:9-11 |
| 13 | யவீருவின் மகள் | லூக்கா 8:41,54,55 |
| 14 | தபீத்தாள் | அப்.9:40 |
| 15 | நாயினூர் விதவையின் மகன் | லூக்கா 7 :12-15 |

## ஏப்ரல் மாத வேத வினாக்களுக்கு பதில அளித்தவர்கள்

1. Mrs. Ajita Ebi
2. Mr.Emmanuel
3. Mrs. Esther Pauline Rani
4. Mrs. Febell Jeevagi Thomas
5. Mrs.Geetha kannan
6. Mrs.Grace shekar
7. Mrs.Kishi Maher
8. Mrs.Jebaseeli Asir
9. Mrs. Jenila Gannraj.L
10. Mrs.Jasmine Sobha
11. Mr. Jeba Jino
12. Mrs.Manuel Sarah
13. Mr.Salin Robert
14. Mrs.Sheeba Merlin
15. Mrs.Sheeba Herlin
16. Mrs. Subija Jino
17. Mrs . Sharmila Rajesh
18. Mr. Prawin Durai Sam
19. Mrs.Helen Sharmila Ray
20. Mrs.praveena Arun

## Children who answered April– 2024 Quiz

1. Aadhav Steve Matthew
2. Adelyn Victoria Jeyaseelan
3. Camryn Robert.S
4. Clement Dave
5. Evelyn Gracia
6. Galvin Robert.S
7. Gabrilyn Hannah
8. Giana Elin
9. Jevlyn Ana
10. Jerilyn Pushpam Nelson
11. Johan Sam Manuel
12. Joha Anit Manuel
13. Jeya Jehosheba Maher
14. Jeya Joshua Maher
15. Jen Scudd
16. Jim Scott
17. Johanan Paul Jino
18. Joanna Paul Jino
19. Kavin Immanuel
20. kavi Yalini
21. Leonel I.J. Stalin
22. Linuel I.J. Sherwyn
23. Liana Erin
24. Steffi Priscilla .R
25. Starlyne Noble
26. Jebasheba .M
27. Joshuva koshy
28. Leona Juliet
29. Hadriel Adventier
30. Yedidiah Arun (Ruwais)
31. Jaylan paul Jino
32. Evelyn Loria V
33. Daniel Vanya (RUWAIS)
34. Yovaan jairus (Ruwais)

# கோதுமை மணி



## அருட்திரு. Sr. ஈடித் பெல் மார்கன்

***இந்திய மண்ணின் விடுமுறை வேதாகமப் பள்ளியின் முன்னோடி***
***14-06-1912 – 20-01-1997***

**தாயகத்தில் தொடர்ந்த பணி**

அமெரிக்கா வந்த ஈடித் எல்லாம் புதிதாய்த் தோன்றுகிறதே என்ற உணர்வால் வருடப்பட்டாலும் வாடாத மலராய் மலர உறுதி கொண்டார். விட்டுச் சென்ற பெரேயவின் புதுப்பரிமானம் அதற்கு மாபெரும் காரணம்.

தன் தாயகத்திற்கே திரும்பிய போதும் தனியே விடப்பட்டது போல உணர்ந்தார் ஈடித். 1945-ம் ஆண்டு முதல் 1972-ம் ஆண்டு வரை இந்தியப் பெண்ணாகவே கட்டுக்கோப்புகளுக்குள் அடங்கி வாழப் பழகியிருந்ததால், ஈடித்திற்கு மீண்டும் சுதந்திர சுயாதீன வாழ்க்கை ஓட்டத்திற்குட்பட்ட அமெரிக்கப் பெண்ணாய் மாற கொஞ்சம் காலம் எடுத்தது. Living Bible மொழித் திருப்பத்தில் வேதத்தை வாசித்துத் கொண்டிருந்த அவருக்கு அந்த மொழித் திருப்பத்தின் ரோமர் 15:19, 2கொரி. 2:12 மற்றும் சங்கீதம் 73:24 வசனங்கள் அவரைக் கிறிஸ்துவுக்குள் வலுவாய் இடைகட்டின.

யான்சி என்ற பகுதியில் குடியேறினார் ஈடித். உணர்ச்சிகள் பிரலாபித்து நின்றன. உணவு, உடை, பழக்க வழக்கம், தட்ப வெப்பநிலை எல்லாமே வித்தியாசம், ஏன் இரவும் பகலும் கூட மாறுபட்டிருந்தன. இந்திய வாழ்வின் ஞாபகங்கள், தன் பிள்ளைகளின் நினைவு, தனது எதிர் காலத்தைக் குறித்த சிந்தனைகள் இப்படி பல எண்ண அலைகள், இதோடு பிறந்து வளர்ந்த சொந்த மண்ணிலேயே மாற்று வீட்டின் உணர்வுகள், 27 ஆண்டுகளுக்குள் இந்தியா

ஈடித்தை இதமாய் மாற்றியிருந்தது. இத்தனை ஆதாரப் பூர்வ மாற்றங்கள் மத்தியிலும் அழைப்பின் திசைமாற்றத்தில் அர்ப்பணிப்பின் ஆழம் அதிகரித்ததால் குழப்பத்தின் குடிலுக்குள் முடங்காமல் தெளிவுடன் செயலாற்ற ஆரம்பித்தார் ஈடித்.

1956-ல் தாயையும் 1967-ல் தந்தையையும் இழந்த ஈடித்தின் சகோதரிகள் இருவரும் அவரவர் குடும்பத்தோடு அமெரிக்காவில் இருந்தனர். தாய், தந்தையின் மரணநேரத்தில் இந்தியாவிலேயே இருந்த ஈடித் தனிமையின் வலியையும், குடும்பத்திலிருந்து தூரமாய் வாழுவதையும் வாழ்க்கையின் நியமமாக்கியிருந்தார். ஏனென்றால் "யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்" (லூக்கா 14:26) என்ற தெய்வ வார்த்தையை வாழப் பழகியிருந்தார். தன் வாழ்க்கையின் தேவைக்காக ஒரு சிறிய வேலை ஸ்தலத்தில் காசாளர் வேலையிலமர்ந்தார். அன்றன்றுள்ள ஆகாரத்திற்கும், அடைக்கலம் புகுந்த வீட்டு வாடகைக்கும், அத்தியாவசிய தேவைக்கும் அது போதுமானதாக இருந்தது. இயேசு மகாராஜாவின் அழைப்பிற்கும், திட்டத்திற்கும் அடிபணிந்ததால் ஈடித் மீண்டும் தன் தாயகமாம் அமெரிக்காவில் ஊழியம் செய்யும் வாய்ப்பைத் தருவாரென கர்த்தரின் நேரத்திற்காய்க் காத்திருந்தார்.

"அழைக்கிறவர் உண்மையுள்ளவர்" (1தெச.5:24). 1973-ம் ஆண்டிலேயே United Methodist Clergy Women என்ற மெதடிஸ்ட் சபைகளின் பெண்பாதிரிகள் வரிசையில் ஈடித் இணையும்படியாக தேவன் வழிவகுத்தார். அவரது சிறிய குடிலில் வோலினா விப்சன் என்ற அமெரிக்க சகோதரியும் குடியேறினார். இந்த வோலினாவும் இந்தியாவில் ஊழியம் செய்து திரும்பியவர். அவர் பணி செய்த ஊழிய ஸ்தாபனத்தில் ஏற்பட்ட மன உளைச்சலோடு தாயகம் திரும்பியவர். அந்த ஸ்தாபனத்தை மன்னிக்க முடியாமல் தவியாய்த் தவித்து, தெய்வ அன்பையுமிழந்து மனநோய்வாப்பட்டிருந்தார். அவரை நேசித்து, அவரோடு ஜெபித்ததோடு பக்குவமாக 'ஒரு மனிதன் சரியான மனநிலையில் வாழ அத்தியாவசியமானது மன்னிப்பு' என்று மென்மையுடன் கூடிய உறுதியோடு ஈடித் வலியுறுத்திக் கொண்டேயிருந்தார். வேதனையில் குழம்பியிருந்த வோலினாவுக்கு இது மனத்தெளிவடைய வழிவகுத்தது.

ஏற்றக்காலத்தில் பாதிரியாரான ஈடித்திற்கு குருமனை கொடுக்கப்பட்டது. அவரை மீண்டும் அமெரிக்கா அழைத்துச் சென்ற தேவன் படிப்படியாக அமெரிக்கப் பெண்ணாக மிக நேர்த்தியாய் வழிநடத்தினார். போராட்டம் என்பது ஊழிய ஸ்தலமான இந்தியாவில் மட்டுமில்லாமல் சொந்த மண்ணாம் அமெரிக்காவிலும் வந்து நின்றது.

**- தொடரும்**

# துணுக்குகள்

## பாடல் பிறந்த கதை

***பரத்துக்கேறு முன்னமே [பாமாலை 140]***

***(Our blest Redeemer ere He breathed)***



*1. பரத்துக்கேறு முன்னமே*
*பேரருள் நாதனார்*
*தேற்றரவாளன் ஆவியை*
*வாக்களித்தார்*

*2. விருந்து போலத் தேற்றவும்*
*அவ்வாவி சேருவார்*
*எத்தாழ்மையான நெஞ்சிலும்*
*சஞ்சரிப்பார்*

*3. அமர்ந்த மென்மை சத்தத்தை*
*போல் நெஞ்சில் பேசுவார்*
*வீண்பயம் நீக்கிக் குணத்தை*
*சீராக்குவார்*

***'பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து.. உங்களுக்கு நினைப்பூட்டுவார்'. யோவான் 14:26***

*ஆண்டவராகிய கிறிஸ்து உயிர்த்தெழுந்தபின் நாற்பது நாட்களாகப் பூலோகத்தில் சஞ்சரித்துப் பலமுறை தமது சீஷருக்குக் காணப்பட்டார். ஆயினும் அவர்கள் உயிர்த்தெழுதலின் மகத்துவத்தையும், அதின் முக்கியத்துவத்தையும் இன்னும் உணரவில்லை. அவரது சீஷரில் தோமா அவர் உயிர்த்தெழுந்ததை விசுவாசிக்கச் சிறிது தயங்கினான். மற்ற சீஷரும் மீன் பிடித்தல் முதலிய தங்கள் பழைய தொழில்களுக்குத் திரும்ப எத்தனித்தனர். இதை முன்னறிந்த ஆண்டவர், 'பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளன்' அவர்களை பலப்படுத்தி, அவர்கள் எருசலேமை விட்டுப்போகாமல் பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருக்கும்படிக் கட்டளையிட்டார். அந்தப்படியே, பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு, ஓரிடத்தில் வந்திருந்தார்கள். அப்பொழுது அக்கினிமயமான நாவுகள் அவர்கள் ஒவ்வொருவர்மேலும் அமர்ந்தன.*

அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டார்கள். இந்த சம்பவத்தை நினைவுகூர, திருச்சபையில் பரிசுத்த ஆவியின் திருநாள் ஆசரிக்கப்படுகிறது.

1829ம் ஆண்டு, பரிசுத்த ஆவியின் திருநாளன்று, காலை ஆலய ஆராதனைக்குப்பின், இங்கிலாந்தில் ஹோடெஸ்டன் நகரில், 56 வயதுள்ள ஒரு அம்மையார் தன் படுக்கையறையின் ஜன்னலுக்கருகில் உட்கார்ந்து, அன்றையத்தினம் ஆராதனையில் ஆற்றப்பட்ட அருளுரையைக் குறித்து ஆழ்ந்து சிந்திக்கலானார். அவர் மனதில் ஆண்டவர் பரத்துக்கேறின காட்சியும், பெந்தெகோஸ்தே நாளில் சீஷர்கள் கூடியிருக்கும்போது அக்கினிமயமான நாவுகள் ரூபத்தில் பரிசுத்த ஆவி சீஷர்மேல் இறங்கின காட்சியும் உண்டானது.

இவ்விதமாக அவர் சிந்தித்துக்கொண்டிருக்கையில் ஒரு பாடல் அவர் மனதில் வரிவரியாக உருவானது. எழுதுவதற்குக் காகிதமோ, பென்சிலோ பக்கத்தில் இல்லாததால், அவர் தமது விரலில் கிடந்த வைர மோதிரத்தினால் அங்கிருந்த கண்ணாடி ஜன்னலில் அப்பாடலின் ஏழு கவிகளை எழுதினார். அந்த அம்மையார் இறந்தபின்னர் அந்தக் கண்ணாடி திருடிக்கொண்டு போகப்பட்டது. இப்பாடலின் ஐந்து கவிகள் மட்டுமே நமது பாட்டுப் புத்தகங்களில் சேர்க்கப்பட்டுள்ளன. இப்பாடல், அருள்திரு. ஜான் டைக்ஸ் (John B. Dykes) என்பவர் எழுதிய St. Cuthbert என்னும் ராகத்தில் கிறிஸ்தவ உலகமெங்கும் பல மொழிகளில் பரிசுத்த ஆவியின் திருநாளன்று பாடப்படுகிறது.

இப்பாடலை எழுதியவர் ஹாரியட் ஆபர் அம்மையார் இவர் 1773ம் ஆண்டு, இங்கிலாந்தில் ஹெர்ட்போர்ட்ஷயர் மாகாணத்திலுள்ள ஹோடெஸ்டன் நகரில் பிறந்தார் (Hoddesdon, Hertfordshire). நல்ல கிறிஸ்தவ சன்மார்க்க நெறியில் வளர்க்கப்பட்டு, அவ்வூரிலுள்ள எல்லா கிறிஸ்தவத் தொண்டுகளிலும் பங்குகொண்டார். ஆலய ஆராதனைகளுக்கு ஒழுங்காகச் சென்று, வீடு திரும்பியவுடன், ஆராதனையில் ஆற்றப்பட்ட அருளுரையைக் குறித்து வெகுநேரம் சிந்தனை செய்வார். அவற்றை அடிப்படையாகக் கொண்ட அநேக பாடல்கள் எழுதியுள்ளார். ஆயினும் அவர் எழுதிய 'பரத்துக்கேறுமுன்னமே' என்னும் ஒரே பாடலின் மூலமே அவர் நினைவுகூரப்படுகிறார்.

ஹாரியட் ஆபர் அம்மையார் 1862ம் ஆண்டு, தமது 80வது வயதில் மறுமைக்குட்பட்டார்.

# ஆலய பக்கம்



## ஆராதனை மற்றும் நிகழ்வுகள் மே – 2024

| தேதி | நாள் | நேரம் | நிகழ்வுகள் |
|---|---|---|---|
| 3 | வெள்ளி | 6.30 pm – 8.00 pm | Junior Church |
| | | 8.30 pm – 11.00 pm | தூய திருவிருந்து ஆராதனை – St.Andrew's church |
| 5 | ஞாயிறு | 12.00pm – 1.00 pm | உபவாச ஜெபம் - ஆயர் இல்லம் |
| | | 6.00 pm – 7.00 pm | பெண்கள் ஐக்கிய சங்கம் – ஆயர் இல்லம் |
| 7 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 10 | வெள்ளி | 6.30 pm – 8.00 pm | Junior Church |
| | | 8.30 pm – 11.00 pm | தூய ஆராதனை – St.Andrew's church |
| 12 | ஞாயிறு | 5.30 pm – 6.30 pm | பெண்கள் ஐக்கிய சங்கம் - முசாபா |
| 14 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 17 | வெள்ளி | 6.30 pm – 8.00 pm | Junior Church |
| | | 8.30 pm – 11.00 pm | தூய திருவிருந்து ஆராதனை – St.Andrew's church |
| 19 | ஞாயிறு | 7.00 pm – 8.00 pm | பெண்கள் ஐக்கிய சங்கம் & ஆண்கள் ஐக்கிய சங்கம் - ஆயர் இல்லம் |
| 21 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஒருங்கிணைந்த வேத ஆராய்ச்சி |
| 24 | வெள்ளி | 6.30 pm – 8.00 pm | Junior Church |
| | | 8.30 pm – 11.00 pm | தூய ஆராதனை – St.Andrew's church |
| 28 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 31 | வெள்ளி | 6.30 pm – 8.00 pm | Junior Church |
| | | 8.30 pm – 11.00 pm | தூய திருவிருந்து ஆராதனை – St.Andrew's church |

# BIBLE READING FOR CHILDREN - MAY 2024




| DATE | BIBLE PORTION | |
|---|---|---|
| 1.05.24 | Romans | 14 : 1 - 6 |
| 2.05.24 | Romans | 14 : 7 - 12 |
| 3.05.24 | Romans | 14 : 13 - 18 |
| 4.05.24 | Romans | 14: 19-22 |
| 5.05.24 | Romans | 15: 1- 6 |
| 6.05.24 | Romans | 15: 7- 13 |
| 7.05.24 | Romans | 15: 14- 22 |
| 8.05.24 | Romans | 15: 23- 29 |
| 9.05.24 | Romans | 15: 30- 33 |
| 10.05.24 | Romans | 16 : 1-7 |
| 11.05.24 | Romans | 16 : 8-14 |
| 12.05.24 | Romans | 16 : 15-22 |
| 13.05.24 | Romans | 16 : 23-27 |
| 14.05.24 | 1 Corin. | 1: 1 - 9 |
| 15.05.24 | Romans | 1: 10 - 17 |
| 16.05.24 | Romans | 1: 18 - 22 |
| 17.05.24 | Romans | 1: 26 - 31 |
| 18.05.24 | Romans | 2: 1 - 5 |
| 19.05.24 | Romans | 2: 6 – 10 |
| 20.05.24 | Romans | 2: 11 - 16 |
| 21.05.24 | Romans | 3: 1 - 9 |
| 22.05.24 | Romans | 3: 10 - 15 |
| 23.05.24 | Romans | 3: 16 - 23 |
| 24.05.24 | Romans | 4: 1 - 7 |
| 25.05.24 | Romans | 4: 8 - 13 |
| 26.05.24 | Romans | 4: 14 - 21 |
| 27.05.24 | Romans | 5: 1 - 5 |
| 28.05.24 | Romans | 5: 6 - 8 |
| 29.05.24 | Romans | 5: 9 - 13 |
| 30.05.24 | Romans | 6: 1 - 6 |
| 31.05.24 | **Romans** | 7 : 1 - 11 |

# தினசரி வேத வாசிப்பு பகுதிகள் மே 2024




| தேதி | நாள் | காலை | | மாலை | |
|---|---|---|---|---|---|
| 1 | புதன் | 2 சாமுவேல் | 3 : 1 - 16 | வெளி | 9 : 1 - 11 |
| 2 | வியாழ | 2 சாமுவேல் | 3 : 17 - 29 | வெளி | 9 : 1 2 - 21 |
| 3 | வெள்ளி | 2 சாமுவேல் | 3 : 30 - 39 | வெளி | 10 : 1 - 11 |
| 4 | சனி | 2 சாமுவேல் | 4 : 1 - 12 | வெளி | 11 : 1 - 10 |
| 5 | ஞாயிறு | 2 சாமுவேல் | 5 : 1 - 13 | வெளி | 11 : 11 - 19 |
| 6 | திங்கள் | 2 சாமுவேல் | 5 : 14 - 25 | வெளி | 12 : 1 - 17 |
| 7 | செவ்வ | 2 சாமுவேல் | 6 : 1 - 12 | வெளி | 13 : 1 - 10 |
| 8 | புதன் | 2 சாமுவேல் | 6 : 13 - 23 | வெளி | 13 : 11 - 18 |
| 9 | வியாழ | 2 சாமுவேல் | 7 : 1 - 15 | வெளி | 14 : 1 - 10 |
| 10 | வெள்ளி | 2 சாமுவேல் | 7: 16 - 29 | வெளி | 14 : 11 - 20 |
| 11 | சனி | 2 சாமுவேல் | 8 : 1 - 18 | வெளி | 15 : 1 - 8 |
| 12 | ஞாயிறு | 2 சாமுவேல் | 9 : 1 - 13 | வெளி | 16 : 1 - 11 |
| 13 | திங்கள் | 2 சாமுவேல் | 10 : 1 - 19 | வெளி | 16 : 12 - 21 |
| 14 | செவ்வ | 2 சாமுவேல் | 11 : 1 - 12 | வெளி | 17 : 1 - 8 |
| 15 | புதன் | 2 சாமுவேல் | 11 : 13 - 27 | வெளி | 17 : 9 - 18 |
| 16 | வியாழ | 2 சாமுவேல் | 12 : 1 - 14 | வெளி | 18 : 1 - 10 |
| 17 | வெள்ளி | 2 சாமுவேல் | 12 : 15 - 31 | வெளி | 18 : 11 - 24 |
| 18 | சனி | 2 சாமுவேல் | 13 : 1 - 13 | வெளி | 19 : 1 - 10 |
| 19 | ஞாயிறு | 2 சாமுவேல் | 13 : 14 - 27 | வெளி | 19 : 11 - 21 |
| 20 | திங்கள் | 2 சாமுவேல் | 13 : 28 - 39 | வெளி | 20 : 1 - 15 |
| 21 | செவ்வ | 2 சாமுவேல் | 14 : 1 - 17 | வெளி | 21 : 1 - 16 |
| 22 | புதன் | 2 சாமுவேல் | 14 : 18 - 33 | வெளி | 21 : 17 - 27 |
| 23 | வியாழ | 2 சாமுவேல் | 15 : 1 - 13 | வெளி | 22 : 1 - 21 |
| 24 | வெள்ளி | 2 சாமுவேல் | 15 : 14 - 26 | ரோமர் | 1 : 1 - 15 |
| 25 | சனி | 2 சாமுவேல் | 15 : 27 - 37 | ரோமர் | 1 : 16 - 32 |
| 26 | ஞாயிறு | 2 சாமுவேல் | 16 : 1 - 10 | ரோமர் | 2 : 1 - 13 |
| 27 | திங்கள் | 2 சாமுவேல் | 16 : 11 - 23 | ரோமர் | 2 : 19 - 29 |
| 28 | செவ்வ | 2 சாமுவேல் | 17 : 1 - 15 | ரோமர் | 3 : 1 - 15 |
| 29 | புதன் | 2 சாமுவேல் | 17 : 16 - 29 | ரோமர் | 3 : 16 - 31 |
| 30 | வியாழ | 2 சாமுவேல் | 18 : 1 -17 | ரோமர் | 4 : 1 - 13 |
| 31 | வெள்ளி | 2 சாமுவேல் | 18 : 19 - 33 | ரோமர் | 4 : 14 - 25 |

# ஆராதனை பாடல்கள் - மே 2024



| | |
|---|---|
| **03-05-24** | |
| பாமாலை – 21 | சேனையின் கர்த்தா |
| பாமாலை – 158 | இதோ உன் நாதர் செல்கின்றார் |
| கீர்த்தனை – 8 | சருவ லோகாதிபா நமஸ்காரம் |
| கீர்த்தனை – 77 | சீர் இயேசு நாதனுக்கு |
| **10-05-24** | |
| பாமாலை – 3 | உன்னதம் ஆழம் எங்கேயும் |
| பாமாலை – 137 | கர்த்தாவின் சுத்த ஆவியே |
| கீர்த்தனை – 98 | ஆவியை மழை போலேயூற்றும் |
| கீர்த்தனை – 320 | மங்களம் சதா மங்களம் |
| **17-05-24** | |
| பாமாலை - 276 | சுத்த ஆவி என்னில் தங்கும் |
| பாமாலை - 139 | தெய்வாவி மனவாசராய் |
| கீர்த்தனை – 99 | ஆவியை அருளுமே சுவாமி |
| முடிவு கவிகள் – 2 | கர்த்தரே தற்காரும் |
| **24-05-24** | |
| பாமாலை - 22 | தூய தூய தூயா |
| பாமாலை - 142 | பிதாவே மா தயாபரா |
| கீர்த்தனை – 221 | ஆண்டவரின் நாமமதை |
| பாமாலை - **25** | கர்த்தாவே இப்போ |
| **31-05-24** | |
| பாமாலை - 15 | ஆ கர்த்தாவே தாழ்மையாக |
| பாமாலை - 172 | சபையின் அஸ்திபாரம் |
| கீர்த்தனை – 237 | தந்தானை துதிப்போமே |
| பாமாலை - 261 | எல்லாருக்கும் மா உன்னதர் |

## திருமறை பாட ஒழுங்குகள் - மே 2024

| தேதி | தியானப் பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்திப் பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 03-05-24 | *நாம் திருப்பணிக்கு அழைக்கப்பட்டிருக்கிறோம்* | எசே. 34:25 – 31 | 1 பேதுரு 2 : 1 - 10 | யோவான் 20 : 19 – 23 | - |
| 10-05-24 | *துய ஆவியானவருக்காக காத்திருங்கள்* | ஏசாயா 40:25 – 31 | அப். 1 : 1 – 11 | லூக்கா 10 : 1 - 20 | 96 |
| 17-05-24 | *புதுப்பிக்கும் ஆவியானவர்* | எசே. 37:1 – 14 | அப். 2 : 1 – 13 | யோவான் 16 : 1 – 13 | - |
| 24-05-24 | *நாம் ஆராதிக்கும் திரியேகர்* | ஆதி. 1:1 – 28 | 2 கொரி. 13 : 1 - 14 | யோவான் 1 : 1 – 8 | 2 |
| 31-05-24 | *இணைந்து கட்டுவோம் வாருங்கள்* | ஏசாயா 11 : 1 - 9 | 12 : 1 - 18 | மத்தேயு 18 : 15 – 22 | - |

## செவ்வாய் கிழமை - ஏரியா ஜெபக்குழுவிற்கான வேத பாடங்கள்

| நாள் | வேத பகுதி | | ஆயர் Schedule |
|---|---|---|---|
| 07-05-24 | சங்கீதம் | 121 | Hamdan |
| 14-05-24 | சங்கீதம் | 122 | Muroor |
| 21-05-24 | ஒருங்கிணைந்த வேத ஆராய்ச்சி | | |
| 28-05-24 | சங்கீதம் | 123 | Mussafa |

**<u>கடந்த மாத தூது பத்திரிக்கைகளைப் படிப்பதற்கான இணைப்பு</u>**



# BIRTHDAY – MAY




| Birth Date | Title | Name |
|---|---|---|
| 1 | Mr. | Antrin Jefry |
| 2 | Mr. | Stalin Raghu |
| 3 | Mrs. | Sheeba Merlin |
| 3 | Mr. | Jacob Raj. J |
| 4 | Mr. | Gunalan A |
| 4 | Mr. | Titus Agastin |
| 4 | Mr. | Joel |
| 5 | Master. | Aiden Steve |
| 6 | Mr. | Michael Sam |
| 8 | Mr. | Keefer Jerry J |
| 8 | Mr. | Praveen Singh |
| 8 | Mr. | Vincent Churchill. N |
| 8 | Mrs. | Deivaseeli. S |
| 8 | Master. | Aadhav Steve Mattew |
| 9 | Mr. | Jayakaran Paul |
| 9 | Mr. | Emmanuel Vanya. J.P |
| 10 | Ms. | Emifa Shalom |
| 10 | Mr. | Max Jeevin |
| 10 | Mr. | Ruban Ponnuswamy |
| 10 | Mrs. | Ruby Ashok |
| 10 | Mr. | Kins. R |
| 10 | Mr. | Frank Santhosh Kumar |
| 12 | Mr. | Aaron Dennison |
| 12 | Mrs. | Gladys Vimala Hepzibah G |
| 12 | Mr. | Stalin Bright |
| 13 | Mr. | Anderson Samuel |
| 14 | Mrs. | Latha |
| 14 | Mrs | M. Sofia |
| 15 | Mrs. | Subija Jino. J |

## BIRTHDAY – MAY




| Birth Date | Title | Name |
|---|---|---|
| 15 | Miss. | ELIZE GLORA ALFRED |
| 15 | Mrs. | STEEFI GABRIELLA |
| 15 | Mrs. | SHEEBA WILFRED |
| 16 | Mr. | CHRIS LILIAN VASANTHA PRINCE |
| 17 | Mr. | RAGLAND ASIR |
| 19 | Mrs. | JOY SHARMILA |
| 19 | Mr. | CARMEL BEESHOW |
| 20 | Mr | S. EBI TENNIYSON |
| 20 | Mrs. | MELBA D |
| 21 | Mr. | DINESH Y |
| 23 | Mrs. | SHEELA JOYCE SAMUEL |
| 23 | Master. | JOSHUA SELVA SHAJI |
| 23 | Mr. | SANTHOSAMANI |
| 25 | Mrs. | GEETHA KANNAN |
| 25 | Ms. | PHOEBE REBEKAH SOLOMON |
| 25 | Baby. | JAYDEN NATHANIEL |
| 25 | Mr. | VIMAL MOHAN |
| 25 | Mrs. | ANISH BRISILLA S R |
| 25 | Mrs. | KALPANA ROSELINE D |
| 25 | Mr. | DENSON THANGAIYAN |
| 26 | Mrs. | BRIJITA PRAMILA |
| 26 | Mr. | GIFTSON |
| 26 | Mr. | GODSON |
| 27 | Ms. | SHERENY DANIEL |
| 27 | Mr. | RICHARD IMMANUEL |
| 29 | Ms. | ABINAYA JASMINE |
| 31 | Ms. | JOANNA RIA. V |

# WEDDING ANNIVERSARY – MAY





| Wedding Date | Title | Name |
|---|---|---|
| 1 | Rev.Dr. & Mrs. | Samuel A |
| 1 | Mr. & Mrs. | Julious Agastian |
| 1 | Mr. & Mrs. | Jebakumar Benjamin |
| 5 | Mr. & Mrs. | J. Manuel Raj John |
| 6 | Mr. & Mrs. | Manuel Yesudian |
| 6 | Mr. & Mrs. | Daniel Nishanth Alexander |
| 6 | Mr. & Mrs. | Vincent Churchill. N |
| 7 | Mr. & Mrs. | Johnson Sagayaraj |
| 9 | Mr. & Mrs. | Rajkumar |
| 9 | Mr. & Mrs. | Johnson Ramesh Kumar |
| 10 | Mr. & Mrs. | Felix Mathew |
| 10 | Mr. & Mrs. | Joel Mart |
| 12 | Mr. & Mrs. | Allwin Emmanuel Packianathan |
| 12 | Mr. & Mrs. | Richard Immanuel |
| 13 | Mr. & Mrs. | Salin Robert. S |
| 13 | Mr. & Mrs. | Michael G |
| 17 | Mr. & Mrs. | Jino. J.D |
| 17 | Mr. & Mrs. | Kishor Raj |
| 19 | Mr. & Mrs. | Vasanth Dhanapaul |
| 21 | Mr. & Mrs. | Dinesh Y |
| 23 | Mr. & Mrs. | Ajin Kumar K C |
| 25 | Mr. & Mrs. | Vigin Cv |
| 29 | Mr. & Mrs. | Radja Thomas |
| 29 | Mr. & Mrs. | Japa Kumar. C. S |
| 31 | Mr. & Mrs. | Arulanandham Pous M |








# VBS - 2024














**AIMS - Madinat Zayed**





**AIMS - Ruwais**





**AIMS – Abu Dhabi**

